# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 112/E/2019**

திரு.N.பாலமுருகன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 15.11.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.சி4/2834/2018 நாள் 13.09.2016-ன் நகல், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் காரியாபட்டி கிளை, பெரியலாங்குளம் சர்வே எண்.9/1-க்கு 2 ஏக்கர் 3 செண்ட் இடத்தினை இடைமுடக்கம் செய்வதற்கு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு, வேறு ஏதேனும் ஆவணங்கள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றின் நகல் மற்றும் மேற்படி இடைமுடக்கம் செய்யப்பட்டதை நீக்குவதற்கு தான் என்ன சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று 4 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 30.11.2018 தேதியிட்ட கடிதத்தில் தகவல் வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 19.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்திட, அவர் 22.12.2018 தேதியிட்ட கடிதத்தில் கோப்பு பரிசீலனையில் உள்ளதால் தகவல் வழங்க வழிவகை இல்லை எனத் தெரிவித்துள்ளார். தகவல்களை வழங்க உத்தரவிடக் கோரி மேல்முறையீட்டாளர் 02.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 21.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் கோரிய இனங்களுக்கான தகவல்களை 13.10.2020 அன்று அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தும், அவர் வராத காரணத்தால், மேற்படி தகவல்கள் அடங்கிய 17.10.2020 தேதியிட்ட கடிதம் பதிவஞ்சலில் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. ஆகவே பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட தகவல் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கப் பெறவில்லையெனில் அல்லது திருப்திகரமானதாக இல்லையெனில், அது குறித்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள், தனது கைபேசி எண்ணுடன், இவ்வாணையத்திற்கு தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 112/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.

திரு.N.பாலமுருகன் த/பெ.நாகரத்தினம்,
3/57 தெற்குத் தெரு, சொக்கனேந்தல்,
A.முக்குளம் அஞ்சல்,
காரியாபட்டி தாலுக்கா,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
RJ/PS 06.11.2020